மனைவி கொலை: கணவருக்கு ஆயுள் சிறை

கேப்டன் பிரபாகரன்

தேனி, ஜூலை 9: தேனி மாவட்டம், கம்பம் அருகேயுள்ள காமயகவுண்டன்பட்டியில் மனைவியைக் கொலை செய்த கணவருக்கு ஆயுள் சிறைத் தண்டனை விதித்து, தேனி மகளிர் நீதிமன்றம் செவ்வாய்க்கிழமை தீர்ப்பளித்தது.

காமயகவுண்டன்பட்டி மந்தையம்மன் கோவில் தெருவைச் சேர்ந்த முத்துகுமார் மகன் கேப்டன் பிரபாகரன் (33). இவரது மனைவி கவிதா (31). மது அருந்தும் பழக்கத்துக்கு அடிமையான கேப்டன் பிரபாகரன், கடந்த 2020-ஆம் ஆண்டு, அக்.4-ஆம் தேதி மது அருந்த பணம் கேட்டு கவிதாவை அடித்துக் கொலை செய்தார்.

இதுகுறித்து ராயப்பன்பட்டி போலீஸார் வழக்குப் பதிவு செய்து அவரைக் கைது செய்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணை தேனி மகளிர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் கேப்டன் பிரபாகரனுக்கு ஆயுள் சிறைத் தண்டனையும், ரூ.2,000 அபராதமும் விதித்து நீதிபதி அனுராதா தீர்ப்பளித்தார்.

கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் 4,095 கான்கிரீட் வீடுகள்

மாவட்ட ஆட்சியர்

திண்டுக்கல்லில் மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி தலைமையில் நடைபெற்ற 'கலைஞரின் கனவு இல்லம்' திட்டத்தைச் செயல்படுத்துவது குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற அலுவலர்கள்.

திண்டுக்கல், ஜூலை 9: திண்டுக்கல் மாவட்டத்தில் 'கலைஞரின் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ் 4,095 குடிசை வீடுகள் கான்கிரீட் வீடுகளாக மாற்றப்படும் என மாவட்ட ஆட்சியர் மொ.நா. பூங்கொடி தெரிவித்தார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் 'கலைஞரின் கனவு இல்லம்' திட்டப் பணிகளைச் செயல்படுத்துவது தொடர்பாக அரசுத் துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்துக்கு ஆட்சியர் மொ.நா.பூங்கொடி தலைமை வகித்தார். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் ஆட்சியர் பூங்கொடி பேசியதாவது:

'கலைஞரின் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் தகுதியுள்ள அனைத்துக் குடிசை வீடுகளையும், கான்கிரீட் வீடுகளாக மாற்றும் நோக்கத்துடன் குடிசைகளில் வசிக்கும் குடும்பங்களை மதிப்பீடு செய்வதற்கான கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதனடிப்படையில், திண்டுக்கல் மாவட்டத்தில், கலைஞர் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ், 1,023 குடிசைகள், புதிய குடிசை வீடுகள் கணக்கெடுப்பில் 1,126 குடிசைகள், அனைவருக்கும் வீடு திட்டத்தின் கீழ், 1,946 குடிசைகள் என மொத்தம் 4,095 குடிசைகள் கண்டறியப்பட்டன.

தமிழ்நாட்டில் 15 மாவட்டங்களில் 5000-க்கும் குறைவான குடிசைகள் உள்ள மாவட்டங்களில் திண்டுக்கல்லும் இடம் பெற்றிருக்கிறது. இதனால், அனைத்துக் குடிசைகளையும் 2024-2025-ஆம் ஆண்டிலேயே 'கலைஞரின் கனவு இல்லம்' திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டது.

சொந்த இடம் உள்ள பயனாளிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வீடு கட்ட ஆணை வழங்கப்படும். பயனாளிகளின் சட்டப்பூர்வ வாரிசாக வாழும் குடும்பங்களும் அனுமதிக்கப்பட ரூ.3.50 லட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டப்படும்.

இதேபோல, கனவு இல்ல பயனாளிகளுக்கு ரூ.50,000 முதல் ஒரு லட்சம் ரூபாய் வரை கடனுதவி மத்திய கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

பளியர் இன மக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றம்: திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் மொ.நா.பூங்கொடி வெளியிட்ட செய்திக் குறிப்பு:

திண்டுக்கல் மாவட்டம் பழனி, ஒட்டன்சத்திரம், ஆத்தூர், கொடைக்கானல் உள்பட 6 வட்டங்களில் 54 கிராமங்களில் பளியர் இன மக்கள் 1,320 குடும்பத்தினர் வசிக்கின்றனர்.

அரசின் நலத் திட்டங்கள் பளியர் இன மக்களைச் சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், துணை ஆட்சியர் தலைமையில் குழுக்கள் நியமிக்கப்பட்டு, சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டன.

இந்த முகாம்களில் ஜாதிச் சான்றிதழ், குடும்ப அட்டை, வாரிசு சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, வங்கிக் கடனுதவி என பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 5,401 மனுக்கள் பெறப்பட்டன. இவற்றில், 2,475 பேரின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு ஆணைகள் வழங்கப்பட்டன. 2,007 பேரின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு, விரைவில் அதற்கான ஆணைகள் வழங்கப்படும். எஞ்சிய 857 மனுக்கள் பரிசீலனையில் உள்ளன என்றார்.

இந்திய கம்யூனிஸ்ட் ஆர்ப்பாட்டம்

பழனி வட்டாட்சியர் அலுவலகம் முன் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர்.

பழனி, ஜூலை 9: வருவாய்த் துறை அலுவலர்களைக் கண்டித்து, பழனி வட்டாட்சியர் அலுவலகம் முன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பழனியை அடுத்த சித்தரேவு கிராமத்தில் விவசாய நிலங்களுக்குச் செல்லும் வண்டிப் பாதையை ஆக்கிரமித்து தனிநபர் ஒருவர் வேலி அமைத்தார். இதுதொடர்பாக விவசாயிகள் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்குத் தொடுத்தனர். இதில் வேலியை அகற்ற நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதனடிப்படையில், வருவாய்த் துறையினர் ஆக்கிரமிப்பை அகற்றவில்லை. நீதிமன்ற உத்தரவின் மீது நடவடிக்கை எடுக்காத வருவாய்த் துறை அலுவலர்களைக் கண்டித்து, பழனி வட்டாட்சியர் அலுவலகம் முன் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதற்கு, கட்சியின் ஒன்றியச் செயலர் தண்டபாணி தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் மணிகண்டன் கண்டன உரை நிகழ்த்தினார். ஆர்ப்பாட்டத்தில் மாவட்டச் செயற்குழு உறுப்பினர்கள் மணி, கௌசல்யா, ராஜாமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டு, வருவாய்த் துறை அலுவலர்களைக் கண்டித்தும், உயர்நீதிமன்ற ஆணையை உடனடியாக அமல்படுத்தக் கோரியும் முழக்கங்களை எழுப்பினர்.

தேனி மாவட்டத்தில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம்: நாளை தொடக்கம்

தேனி, ஜூலை 9: தேனி மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளில் 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாம் வியாழக்கிழமை (ஜூலை 11) தொடங்குகிறது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தேனி மாவட்டத்தில் 8 ஊராட்சி ஒன்றியங்களுக்குள்பட்ட ஊராட்சிகளில் வியாழக்கிழமை தொடங்கி, தொடர்ந்து 31 இடங்களில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாம்கள் நடைபெற உள்ளன. முகாம் நடைபெறும் நாள், இடம் குறித்து சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் மூலம் அறிவிக்கப்படும்.

பெரியகுளம் ஊராட்சி ஒன்றியம், லட்சுமிபுரம் ஊராட்சியில் உள்ள ருக்குமணி திருமண மண்டபத்தில் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு அமைச்சர் இ.பெரியசாமி 'மக்களுடன் முதல்வர்' திட்ட முகாமை தொடங்கி வைக்கிறார்.

இந்த முகாமில் லட்சுமிபுரம், வடபுதுப்பட்டி, ஜல்லிப்பட்டி, சருத்துப்பட்டி ஆகிய ஊராட்சிக்குள்பட்ட பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு அரசு நலத் திட்ட உதவிகள், பட்டா மாறுதல், புதிய மின் இணைப்புகள், நில அளவீடு, வருவாய்த் துறை சான்றிதழ்கள், பிறப்பு, இறப்பு சான்றிதழ்கள், கூட்டுறவு சங்க கடனுதவி, காவல் துறை வழக்குகள் உள்ளிட்டவை தொடர்பாக மனு அளித்து தீர்வு காணலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

முறைகேடு: வேளாண்மை கூட்டுறவுச் சங்க செயலர்கள் பணியிடை நீக்கம்

நிலக்கோட்டை, ஜூலை 9: ஆத்தூர் சட்டப் பேரவைத் தொகுதிக்குள்பட்ட கே.சிங்காரக்கோட்டை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் முறைகேடு செய்ததாக, அதன் செயலர்கள் இருவர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர்.

கே.சிங்காரக்கோட்டை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் அதே பகுதியைச் சேர்ந்த மாற்றுத்திறனாளி ஜெயலட்சுமி ரூ. 30 ஆயிரத்துக்கு நகைக் கடன் பெற்றிருந்தார். பின்னர், நகையை திருப்புவதற்காக பணத்தை அந்தக் கூட்டுறவு வங்கியில் செலுத்தினார். ஆனால், நகையை திரும்பக் கொடுக்க காலதாமதம் ஏற்பட்டதால், திண்டுக்கல் மாவட்ட ஆட்சியரிடம் கடந்த வாரம் புகார் அளித்தார்.

இந்த நிலையில், ரெட்டியார்சத்திரம் வட்டார தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க களஅலுவலர் பொன்னுசாமி இந்தக் கூட்டுறவு சங்கத்தில் செவ்வாய்க்கிழமை விசாரணை நடத்தினார்.

பின்னர், பொன்னுசாமி கூறியதாவது:

கே.சிங்காரப்பேட்டை தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் முறைகேட்டில் ஈடுபட்ட அதன் செயலர் சதாசிவம் பணி ஓய்வு பெற்றுவிட்டார். அங்கு செயலராகப் பணியாற்றிய பால்பாண்டி, பிரபாகரன் ஆகியோர் முறைகேடு தொடர்பாக பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். சதாசிவம், பிரபாகரன் ஆகியோரிடமிருந்து ரூ.10 லட்சம் மீட்கப்பட்டது.

இது தொடர்பாக தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறோம் என்றார் அவர்.

இந்தப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள், பொதுமக்கள் அடகு வைத்த நகைகளின் மீது ரூ. ஒரு லட்சம் முதல் ரூ.2 லட்சம் வரை கூடுதலான தொகைக்கு கடன் பெற்றதாக அந்த வங்கியின் செயலர்கள் முறைகேடு செய்ததாகவும், அடகு வைக்கும் நகைகளுக்கு முறையாக ரசீது வழங்கப்படவில்லை எனவும் புகார் எழுந்தது.

நகைக் கடன் தள்ளுபடியின் போது, பெரும்பாலான விவசாயிகளின் செலவுத் தொகை என்ற பெயரில் குறிப்பிட்ட ஒரு தொகையை பெற்று மோசடி நடைபெற்றதாகவும் விவசாயிகள் புகார் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பைக் விபத்தில் இளைஞர் பலி

தேனி, ஜூலை 9: தேனி அருகே இருசக்கர வாகனத்தில் சென்ற இளைஞர் சாலையோரத்தில் இருந்த மின் கம்பத்தில் மோதியதில் திங்கள்கிழமை உயிரிழந்தார்.

தேனி அருகேயுள்ள நாகலாபுரத்தைச் சேர்ந்த வேல்ராஜ் மகன் செல்வகுமார் (33). இவர் தேனியிலிருந்து நாகலாபுரத்துக்கு இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தார். அப்போது, கோபாலபுரம்-நாகலாபுரம் சாலையில் இரு சக்கர வாகனம் கட்டுப்பாட்டை இழந்து சாலையோரத்தில் இருந்த மின் கம்பம் மீது மோதியது. இதில் பலத்த காயமடைந்த செல்வகுமார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இதுகுறித்து பழனிசெட்டிபட்டி போலீஸார் வழக்குப் பதிந்து விசாரிக்கின்றனர்.

நுகர்பொருள் வாணிபக் கழக கிட்டங்கியில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ஆய்வு

தேனி, ஜூலை 9: போடி நுகர்பொருள் வாணிபக் கழகக் கிட்டங்கியில் திங்கள்கிழமை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் ந.சுப்பையன் ஆய்வு செய்தார்.

தேனி மாவட்டம், போடி நுகர்பொருள் வாணிபக் கழகக் கிட்டங்கியின் செயல்பாடுகள், இருப்பு வைக்கப்பட்ட குடிமைப்பொருள்களின் தரம், கூட்டுறவு பண்டகச் சாலையின் செயல்பாடுகள், அம்மா மருந்தகம், கோடங்கிபட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் செயல்பாடுகள் ஆகியவற்றை கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, கூட்டுறவு சங்கங்களின் தேனி மண்டல இணைப் பதிவாளர் ஆரோக்கிய சுகுமார், மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி மேலாண்மை இயக்குநர் வாஞ்சிநாதன் ஆகியோர் உடனிருந்தனர்.

தேனி மாவட்டத்தில் 35 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது

தேனி, ஜூலை 9: தேனி மாவட்டத்தில் கடந்த 6 மாதங்களில் 35 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்டனர்.

இதுகுறித்து மாவட்டக் காவல் துறை அதிகாரிகள் கூறியதாவது:

மாவட்டத்தில் கடந்த 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஜூன் மாதம் வரை போக்சோ சட்டத்தின் கீழ் 7 பேரும், கொலை, கொலை முயற்சி வழக்குகளில் 19 பேரும், கஞ்சா விற்பனை, கடத்தல் வழக்குகளில் 9 பேரும் என மொத்தம் 35 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்டனர். மேலும், கஞ்சா விற்பனை, மணல் கடத்தலில் தொடர்ந்து ஈடுபடுவோர்கள் மீது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ், வழக்குப் பதிந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

equitas Small Finance Bank

எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்
(முன்னர் எக்விடாஸ் ஃபைனான்ஸ் லிமிடெட் என அறியப்பட்டது)
பெருநிறுவன அலுவலகம்: எண்.769, ஸ்பென்சர் பிளாசா, 4வது தளம், பேஸ் II, அண்ணாசாலை, சென்னை, தமிழ்நாடு - 600002
போன் : 044 - 4299 5000, 044 - 4299 5050

சுவாதீன அறிவிப்பு அசையா சொத்துக்களானது விதி 8 (1)

கீழே கையொப்பமிட்டுள்ளவர் எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அதிகாரப்பூர்வ அலுவலராக இருக்கின்றபடியால் 2002ம் (54/2002) ஆண்டு கடனீட்டுச் சொத்துகளை ரொக்கமாக்குதல், நிதிச் சொத்துக்களைச் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச்சட்டம் பிரிவு 13(12)ன் கீழும், அதற்குத் தொடர்புடைய 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க விதிகள் 3-ன் கீழும் தமக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழ்க்காணும் கடன்தாரர்களுக்கு / ஜாமீன்தாரர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள தேதியிட்ட கோரிக்கை அறிவிப்புகளை அனுப்பி அந்த அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிட்டுள்ள செலுத்த வேண்டியுள்ள கடன் பாக்கிகளைச் செலுத்துமாறு கோரப்பட்டது. ஆனால், கடன்தாரர்கள் கீழ்குறிப்பிட்டுள்ள பாக்கி தொகையை முழுவதும் செலுத்த தவறிவிட்டதால் கடன்தாரர்களுக்கும் / ஜாமீன்தாரர்களுக்கும் / பொதுமக்களுக்கும் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில் மேற்படி சட்டம் 13 (4) மற்றும் அதற்குத் தொடர்புடைய மேற்படி விதி 8-ன் கீழ் தமது அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை அதிகாரப்பூர்வ அலுவலர் தமது சுவாதீனத்தில் எடுத்துக் கொண்டுள்ளார். எனவே முக்கியமாக கடன்தாரர்களுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனமாகியுள்ள மேற்படி அடமான சொத்து விஷயத்தில் எவரும் எவ்வித பேரமோ / நடவடிக்கையோ வைத்துக் கொள்ள கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-க்கு கீழே குறிக்கப்பட்டவாறு தொகைகளுடன் அதற்குண்டான வட்டி மற்றும் பிற செலவுகள் சேர்த்து செலுத்துவதற்கு கட்டுப்பட்டதாகும். சட்டம் பிரிவு 13 துணை பிரிவு 8-ன் படி கடனீட்டு சொத்துக்களை மீட்டு கொள்வதற்கு கால அவகாசம் உள்ளது என்று கடன்தாரரின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகிறது.

கடன்தாரர் / இணை கடன்தாரர் பெயர்	கடனீட்டுச் சொத்துக்களின் விவரங்கள் (அசையா சொத்து / கள்)
கிளை: திருநகர் கணக்கு எண். SETIRNR0346107 கடன்தாரர்கள் : 1. C.ஆதிராஜா 2. A.சோனையம்மாள்	மதுரை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் மதுரை தெற்கு இணை - IV துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட மதுரை மாவட்டம், மதுரை வடக்கு தாலுக்கா, மீனாக்கரணை கிராமம், நத்தம் சர்வே எண்.46/1ன்படி **477 சதுர அடி** நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் பொது வழி. மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : ஆதிராஜா அவர்களின் நிலம், தெற்கில் : சிமெண்ட் சாலை, கிழக்கில் : சிமெண்ட் சாலை, மேற்கில் : குள்ளக்குடியான் அவர்களின் வீடு. அளவுகள் : கிழக்கு மேற்காக வடக்கு பகுதியில் - 28 அடி, தெற்கு பகுதியில் - 25 அடி, தெற்கு வடக்காக கிழக்கு பகுதியில் - 18 அடி, மேற்கு பகுதியில் - 18 அடி. மொத்தம் **477 சதுர அடி.** இந்த சொத்து மதுரை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் மதுரை தெற்கு இணை - IV துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது. மற்றும் அங்குள்ள கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்கள், மற்றும் பூமியில் பொருத்தப்பட்டுள்ள அல்லது நிலத்தில் நிலையாக பொருத்தப்பட்டுள்ள ஏதேனும் பொருட்கள் தற்போதும் எதிர்காலத்திற்கும் சேர்ந்து மற்றும் அனைத்து வசதி உரிமைகள் உட்பட.
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 15-04-2024 & ரூ.7,01,168/- — **சுவாதீன தேதி** 08.07.2024
கிளை: திருநகர் கணக்கு எண். SEMDURI0129303 கடன்தாரர்கள் : 1. D.முத்துபேச்சி 2. U.தனுஷ்கோடி 3. D. ராம்குமார்	மதுரை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் மதுரை இணை IV துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட மதுரை மாவட்டம், மதுரை தெற்கு தாலுக்கா, 41, அவனியாபுரம் கிராமம், மனை வரி தோராய பட்டா எண். 517, சர்வே எண்.466 பகுதி, புதிய சர்வே எண்.466/2-ன் படி **334 சதுர அடி** நிலம் மற்றும் அங்குள்ள கட்டிடம், மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : நடராஜன், தெற்கில் : திரு.சமையன் அவர்களுக்கு சொந்தமான வீடு, கிழக்கில் : நடராஜன், மேற்கில் : திரு.தனுஷ்கோடி அவர்களுக்கு சொந்தமான சொத்து. **அளவு : 334 சதுர அடி.** இந்த சொத்து மதுரை தெற்கு பதிவு மாவட்டம் மற்றும் மதுரை இணை எண். 4 துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது. மற்றும் அங்குள்ள கட்டிடங்கள் மற்றும் கட்டுமானங்கள், மற்றும் பூமியில் பொருத்தப்பட்டுள்ள அல்லது நிலத்தில் நிலையாக பொருத்தப்பட்டுள்ள ஏதேனும் பொருட்கள் தற்போதும் எதிர்காலத்திற்கும் சேர்ந்தது மற்றும் அனைத்து வசதி உரிமைகள் / வழக்கமான உரிமைகள் உட்பட.
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 25-03-2024 & ரூ. 2,49,883/- — **சுவாதீன தேதி** 09.07.2024
கிளை: சிம்மக்கல் கணக்கு எண். SESMMKL0259750 கடன்தாரர்கள் : 1. R. பால்பாண்டி 2. P. சோனியாகாந்தி	பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் பெரியகுளம் இணை 2 துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்ட பெரியகுளம் தாலுகா, ஜெயமங்கலம் கிராமம், பிளாக் எண்.3, வார்டு - 3, கதவு எண்.272, நத்தம் சர்வே எண்.2376/2பகுதி தற்போது சர்வே எண்.2376/34-ன் படி **866.25 சதுர அடி** நிலம் மற்றும் அங்குள்ள பொது வழியுடன் கூடிய கட்டிடம். மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் :கிழக்கு மேற்கான நெரு. நெற்லி : திரு.மூக்கையன் அவர்களின் வீடு, கிழக்கில் : திருமதி.அண்ணாபாக்கியம் அவர்களின் வீடு, மேற்கில் : திரு.தங்கம் அவர்களின் வீடு, அளவுகள்: கிழக்கு மேற்காக வடக்கில்: 26.25 அடி, தெற்கில்: 26.25 அடி, வடக்கு தெற்காக கிழக்கில்: 33 அடி, மேற்கில்: 33 அடி. **மொத்தம் 866.25 சதுர அடி.** இந்த சொத்து பெரியகுளம் பதிவு மாவட்டம் மற்றும் பெரியகுளம் இணை 2 துணை பதிவு மாவட்டத்திற்குட்பட்டது. மற்றும் அங்குள்ள அனைத்து கட்டிடங்கள் மற்றும் அங்கு இணைக்கப்பட்டுள்ள கட்டுமானங்கள் அல்லது தற்போது மற்றும் பின்வரக்கூடிய காலத்தில் நிரந்தரமாக நிலத்துடன் பொருத்தப்பட்டவைகள் மற்றும் அதனுடன் அனைத்து வழக்கமான உரிமைகள் உட்பட.
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 01-03-2024 & ரூ. 2,80,098/- — **சுவாதீன தேதி** 08.07.2024
கிளை: சிம்மக்கல் கணக்கு எண். SESMMKL0351394 கடன்தாரர்கள் : 1. R. உதயகுமார் 2. U. ஞானகுரு	மதுரை தெற்கு பதிவு மாவட்டம், மற்றும் மதுரை தெற்கு இணை IV துணைப்பதிவு மாவட்டத்திற்கு உட்பட்ட மதுரை மாவட்டம், மதுரை தெற்கு தாலுகா, போத்துப்பு பிட் - II கிராமம், சர்வே எண்.309/16 பிறகு UDR மறு சர்வே எண்.18/16-ன் படி **318 சதுர அடி** நிலம், மேலும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : திரு.மதுரைவீரன் மற்றும் பிற நபர்களுக்கு சொந்தமான நிலம், தெற்கில் : 3 அடி பொது நடைபாதை, கிழக்கில் : திரு.ராமசுப்ரமணியன் மற்றும் பிற நபர்களுக்கு சொந்தமான நிலம், மேற்கில் : திரு.பிரசன்னகுமார் மற்றும் பிற நபர்களுக்கு சொந்தமான நிலம், அளவு: **318 சதுர அடி.** இந்த சொத்து மதுரை தெற்கு பதிவு மாவட்டம், மற்றும் மதுரை தெற்கு இணை IV துணைப்பதிவு மாவட்டத்திற்குட்பட்டது. மற்றும் அங்குள்ள அனைத்து கட்டிடங்கள் மற்றும் அங்கு கொடுக்கப்பட்டுள்ள கட்டுமானங்கள் அல்லது நிலத்தில் நிரந்தரமாக இணைக்கப்பட்ட பொருட்கள் மற்றும் தற்போது / பின்வரும் காலத்தில் அனைத்து உட்புற மற்றும் வெளிப்புற வழி உரிமைகள் / வழக்கமான உரிமைகள் உட்பட.
	கோரிக்கை அறிவிப்பு தேதி/தொகை 15-04-2024 & ரூ.1,90,460/- — **சுவாதீன தேதி** 08.07.2024

தேதி : 10.07.2024
இடம் : மதுரை

அதிகாரப்பூர்வ அலுவலர்,
எக்விடாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்

SOUTH INDIAN Bank Experience Next Generation Banking

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., மதுரை பிராந்திய அலுவலகம்: முதல் மாடி, YMCA மிண்டூ, அஸ்டோரியா ஹோட்டல் எதிரில், 70 அடி ரோடு, எல்லீஸ் நகர், மதுரை, தமிழ்நாடு. Pin-625016. ro1015@sib.co.in, Ph: 0452 2300205

இ- ஏல விற்பனை அறிவிப்பு

Ref.: RO/SAR/SN/36/2024-25 — தேதி: 06.07.2024

நிதிச்சொத்துக்களின் பிணையம் மற்றும் மறுசீரமைப்பு மற்றும் பிணையுறுதல் அமலாக்கச் சட்டம் 2002-ன் கீழ், பிணைய நல (அமலாக்க) விதிகள் 2002-ல் கூறப்பட்டுள்ள விதி 8(6) மற்றும் 9(1)-ன்படி அசையா சொத்துக்களுக்கான இ-ஏல விற்பனை அறிவிப்பு.

1) திரு. S. இமாம் அஹமது ஹுஸைன், [M/s.சிராஜ் மில்க் ஏஜென்ஸி உரிமையாளர்], எண்.2/1, M.K.காம்ப்ளக்ஸ், வத்தலக்குண்டு ரோடு, பேகம்பூர், திண்டுக்கல், தமிழ்நாடு-624002. மேலும் இருப்பிடம்: கதவு எண்.85, ஜின்னா நகர், மதுரை ரோடு, பேகம்பூர், திண்டுக்கல், தமிழ்நாடு-624002.

2) திருமதி. I. கௌஸியா, எண்.85, ஜின்னா நகர், மதுரை ரோடு, பேகம்பூர், திண்டுக்கல், தமிழ்நாடு - 624 002. மேலும் இருப்பிடம்: எண்.2/1, M.K. காம்ப்ளக்ஸ், வத்தலக்குண்டு ரோடு, பேகம்பூர், திண்டுக்கல், தமிழ்நாடு-624002.

தி சௌத் இந்தியன் வங்கி லிட்., திண்டுக்கல் கிளையில் (Secured Creditor) அடமானம் வைக்கப்பட்டு, தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட்டின் (Secured Creditor) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கொள்நிலை சுவாதீனம் செய்யப்பட்டிருக்கும் கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்களை மேலே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்(கள்) மற்றும் உத்திரவாதி(கள்) ஆகியோர் 04.07.2024 தேதிப்படி தி சௌத் இந்தியன் வங்கி லிமிடெட், திண்டுக்கல் கிளைக்கு (Secured Creditor) செலுத்த வேண்டிய தொகை ரூ.65,08,902.19-ஐ (ரூபாய் அறுபத்து ஐந்து லட்சத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து இரண்டு மற்றும் பைசா பத்தொன்பது மட்டும்) பின்வட்டி மற்றும் செலவினங்களுடன் வசூலிக்கும் பொருட்டு "அது இருக்கும் இடத்திலேயே", "என்ன உள்ளதோ அப்படியே", "அது எந்த நிலையிலிருப்பினும்" என்ற அடிப்படையில் 23.08.2024 அன்று ஏல விற்பனை செய்யப்படும் என்று பொதுமக்களுக்கு குறிப்பாக கடன்தார் / உத்திரவாதிக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

சொத்தின் உரிமையாளர் பெயர்: திரு. S. இமாம் அஹமது ஹுஸைன்

அசையா சொத்துக்கள் விபரம்: திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தாலுகா, படியூர்கிராமம், சர்வே எண். 1277/10B-ன் 4800 சதுரடி [1200 சதுரடி+1200 சதுரடி+1200 சதுரடி+1200 சதுரடி] அளவில் பிளாட் எண்கள். 5, 6, 11 & 12 ஆகியவற்றின் அனைத்து பகுதிகளுடன், அதிலுள்ள பிற கட்டுமானங்கள், மேம்பாடுகள், நடைபாதை மற்றும் வண்டிப்பாதை உரிமை, தற்போதைய பயன்பாட்டு உரிமைகள் மற்றும் உபகரணங்கள் அனைத்தும் சேர்த்து திரு.S.இமாம் அஹமது ஹுஸைன் என்பவருக்கு சொந்தமான இந்த சொத்து, வடமதுரை சார்பதிவகத்தில் 24.12.2018 தேதியிட்ட விற்பனைப்பத்திரப் பதிவுஎண். 5095/2018-ல் மேலும் முழுவதுமாக விவரிக்கப்பட்டுள்ளது. இதன் எல்லைகள்: 1200 சதுரடி அளவுள்ள பிளாட் எண்.5-ன் எல்லைகள்: வடக்கே: பிளாட் எண்.12, கிழக்கே: பிளாட் எண்.6, தெற்கே: 20 அடி அகல கிழக்கு-மேற்கு பொது நடைபாதை, மேற்கே: சர்வே எண்.1277/9D-ஆள்ள சொத்து. 1200 சதுரடி அளவுள்ள பிளாட் எண்.6-ன் எல்லைகள்: வடக்கே: பிளாட் எண்.11, கிழக்கே: பிளாட் எண்.7, தெற்கே: 20 அடி அகல கிழக்கு-மேற்கு பொது நடைபாதை, மேற்கே: பிளாட் எண்.5. 1200 சதுரடி அளவுள்ள பிளாட் எண்.11-ன் எல்லைகள்: வடக்கே: 20 அடி அகல கிழக்கு-மேற்கு பொது நடைபாதை, கிழக்கே: பிளாட் எண்.10, தெற்கே: பிளாட் எண்.6, மேற்கே: பிளாட் எண்.12. 1200 சதுரடி அளவுள்ள பிளாட்